**சுத்தமான சக்தி மற்றும் அணுகுமுறை மேம்பாட்டுச் செயற்திட்டம் - 2013**

சுத்தமான சக்தி மற்றும் அணுகுமுறை மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏடீபீ) மற்றும் இலங்கை மின்சார சபை (சீஈபீ) மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா எலெக்ரிக்சிற்றீ கம்பனி (தனியார்) (எல்ஈசீஓ) என்பவற்றிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூன் 17 ஆந் திகதிய 2518 ஆம் இலக்க மற்றும் 2519 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கைகளின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 0149 எஸ் ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர் மின்வலு மற்றும் சக்தி அமைச்சாவதுடன் சகல பகுதிகளிற்குமான அமுலாக்கல் முகராக இலங்கை மின்சார சபை உள்ளதுடன் எல்ஈசீஓ இ.மி.சபையுடன் இணைந்து பகுதிகள் 3 மற்றும் 4 என்பவற்றை அமுலாக்க வேண்டும். (1) பலம் வாய்ந்த மின்மாற்றி மற்றும் விநியோக வலையமைப்பு மற்றும் மாநகர வீதி விளக்குகளின் கேள்வி பக்க முகாமைத்துவம், (ii) சிறிய அனல் மின்சார பொறிக்கான வலையமைப்புத் தடைகளை அகற்றும் நிலை மற்றும் (iii) கிழக்கு மாகாணத்தில் பலமிக்க மின்மாற்றி வலையமைப்பு மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாகாணங்களில் சேவை இணைப்புக்களிற்கான விரிவான கடன் ஆதரவு நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றினூடாக இ.மி.சபை மற்றும் எல்ஈசீஓ வின் மேவுகை மற்றும் சேவை வினைத்திறனை முன்னேற்றுவதன் மூலம் சாத்தியமான மற்றும் நம்பிக்கையான மின்சார வழங்கலை உறுதிப்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். 2009 யூன் மாதத்தில் செயற்திட்ட நிர்வாக விஞ்ஞாபனத்தின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் (ரீஈசீ) ரூபா 20,274.8 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 188.2 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,689.2 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 164.2 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 பெப்ரவரி 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 மே 31 அளவில் பூர்த்தி செய்யப்படவேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. எனினும், 2518 ஆம் இலக்க கடன் தொடர்பில் 2013 நொவம்பர் 30 இலிருந்து 2015 நொவம்பர் 30 வரை காலப்பகுதி நீடிக்கப்பட்டதுடன் 2519 ஆம் இலக்கக் கடன் தொடர்பாக 2013 நொவம்பர் 30 இலிருந்து 2015 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஏடீபீ மானியத்தின் முடிவுத் திகதியை 2014 செப்தெம்பர் 30 ஆக நீடித்திருந்தது. நிதியின் மூலத்தின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| மூலம் | பகுதி இல | ஐ.அ.டொலர் (மில்லியன்) | ஐ.அ.டொலர் (மில்லியன்) | இல.ரூபா (மில்லியன்) | இல.ரூபா (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | | | | |
| சாதாரண மூலதன வளங்கள் (ஓசீஆர்) **கடன்**– சீஈபீ | 1,2,5,6 & 7 | 114.4 | - | 12,324.3 | - |
| எல்ஈசீஓ | 3 | 20.6 | **135.0** | 2,219.2 | **14,543.5** |
| ஆசிய அபிவிருத்தி நிதியம் **(ஏடிஎவ்) கடன்** - சீஈபீ | 7 | 21.5 | | 2,316.1 | |
| | 8 | 3.5 | **25.0** | 377.0 | **2,693.1** |
| மானியம் - | | | | | |
| - யப்பானிய அரசாங்கம் * | 4 | 2.0 | | 215.6 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - காலநிலை மாற்ற நிதியம் | 4 | 2.2 | **4.2** | 237.0 | **452.6** |
| **உப மொத்தம்** | | | **164.2** | | **17,689.2** |
| **இலங்கை அரசாங்கம்** (ஜீஓஎஸ்எ) | | | 24.0 | | 2,585.6 |
| **மொத்தம்** | | | **188.2** | | **20,274.8** |

- சுத்தமான சக்தி நிதியளிப்பு பங்காண்மை வசதியின் கீழ், ஆசிய சுத்தமான சக்தி நிதியத்தினூடாக வழங்கப்பட்டு ஏடிபீ ஆல் நிருவகிக்கப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன்/மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் / மானியத்தின் கீழான பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டனவா என்பதும்,

(ஈ) கடன் / மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) அவை கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில்குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 4,811,874,425 தொகையானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 14,098,112,042 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| நடவடிக்கைகள் | ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| முறைமை கட்டுப்பாட்டுப் புதுப்பித்தல் | 880,758,061 | 715,542,953 | 1,672,788,808 |
| மின்மாற்றி முறைமை பலப்படுத்தல் மின்மாற்றி வரிசை | 317,651,981 | 1,325,112,133 | 2,518,460,483 |
| மின்மாற்றி முறைமை பலப்படுத்தல் - மின் உற்பத்தி உப நிலையம் | 1,428,748,609 | 1,214,526,043 | 2,791,036,801 |
| புதுப்பிக்கும் சக்திக்கான வலையமைப்பு இயலளவு விஸ்தரிப்பு | 570,794,312 | 2,205,259,942 | 3,143,516,437 |
| முறைமை கட்டுப்பாட்டு புதுப்பித்தலுக்கான உசாத்துணை சேவைகள் | 4,745,085 | 15,521,436 | 34,754,050 |
| கிழக்கு மாகாணத்தில் மின்மாற்றி முறைமை பலப்படுத்தல் | 522,482,319 | 1,609,026,203 | 2,510,352,208 |
| விநியோக உப நிலையங்கள் விஸ்தரிப்பு எல்ஈசீஓ | 1,075,169,083 | 121,604,939 | 1,407,975,204 |
| மாநகர வீதி விளக்குகளிற்கான கேள்விப்பக்க முகாமைத்துவம் எல்ஈசீஓ | - | 4,220,665 | 6,039,333 |
| மாநகர வீதி விளக்குகளிற்கான கேள்விப்பக்க முகாமைத்துவம் (சீஈபீ) | 11,863,389 | 4,780,176 | 17,761,689 |
| மொத்த செலவினம் | 4,812,212,739 | 7,215,594,490 | 14,102,685,013 |
| கழி : ஏனைய வருமானம் மற்றும் இலாபங்கள் | (338,314) | (1,049,079) | (4,572,971) |
| மொத்த தேறிய செலவினம் | 4,811,874,425 | 7,214,545,411 | 14,098,112,042 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின்படி, செயற்திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் கிடைத்தவுடன் ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தொடர்புபட்ட நிதி ஆண்டின் பின்னர் ஒன்பது மாதங்களிற்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு

சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி, கால இலக்கை எய்தும் விதத்தில் செயற்திட்டம் நியாயமான காலப்பகுதிக்கு இடையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டியது செயற்திட்டத்தின் பொறுப்பாகும். எனினும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2014 ஒகஸ்த்து 08 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் 1 மற்றும் 5 ஆம் பகுதிகளின் கீழ் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 15,467,796 தொகையான மீளளிக்கத்தக்க வெளிநாட்டு உதவி கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 57 வாகனங்களில் பதினெழு வாகனங்கள் 2013 இல் சீஈபீ க்கு மாற்றப்பட்டிருந்தன. ஆனால் அவற்றின் மாற்றக்கிரயம் நிர்ணயிக்கப்பட்டு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கடன்பெறும் கிரயம் ரூபா 821,526,530 ஆகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி, கடன் பெறும கிரயம் ரூபா 871,489,688 ஆக இருக்க வேண்டும்.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட இ.மி. சபையிடமிருந்து கிடைத்த உதவு தொகை கடன் பெறும் கிரயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பிழையான சீராக்கல் காரணமாக ரூபா 121,577,672 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டது. மேலும் காசோட்டக் கூற்றில் காட்டப்பட்ட நிதி நடவடிக்கையிலிருந்தான காசோட்டமும் மேற்படி பிறள் கூற்று காரணமாக அதே சம தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின்படி உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டு பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் செலவினம் | மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | % |
| ஏடிபீ-கடன் | 164.2 | 17,689.2 | 4,784.6 | 3,604.4 | 10,727.2 | 6,962.0 | 39 |
| ஜீஓஎஸ்எல்/சீஈபீ | 24.0 | 2,585.6 | 299.0 | 200.2 | 1,283.0 | 1,302.6 | 50 |
| | | | | | | | 41 |
| மொத்தம் | 188.2 | 20,274.8 | 5,083.6 | 3,804.6 | 12,010.2 | 8,264.6 | |

2013 திசெம்பர் 31 அளவில் செயற்திட்டக் காலப்பகுதியில் 69 சதவீதம் முடிந்துவிட்ட போதிலும் வெளிநாட்டு நிதிகளின் நிதிசார் செயலாற்றல் வெளிநாட்டு நிதிகளின் பயன்பாடு மற்றும் செயற்திட்ட காலப்பகுதி என்பவற்றிக்கிடையில் பொருட்படுத்தக்கூடிய பொருத்தப்பாடின்மையை உருவாக்கும் 61 சதவீதமாக காட்டப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம் 59 சதவீதம் மட்டுமேயாகும்.

## 6.2 பௌதீக செயலாற்றல்

கீழே விபரிக்கப்பட்டவாறு பல்வேறு காரணங்களினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பல்வேறு முன்னேற்ற வேலைகள் ஆரம்பிக்கப்படாமலோ அல்லது மெதுவான முன்னேற்றத்தை காட்டுவதாகவோ இருந்ததென்று அவதானிக்கப்பட்டது.

(i) பொதி-அ-வின் லொட்1 இன் கீழ் தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிர்மாணம் மற்றும் மேற்பார்வை கட்டுப்பாடு நிறுவுதல் மற்றும் தரவு சுவீகரித்தல் மற்றும் தொடர்பாடல் முறைமை தொடர்பான வேலைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்திசைவிலுள்ள தாமதம் காரணமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குருநாகலையிலுள்ள தற்போதைய மின் உற்பத்தி உப நிலையத்தின் விஸ்தரிப்பு தொடர்பான வேலைகளின் நோக்கெல்லை தொடர்ந்து மாற்றப்பட்டிருந்ததுடன் அதனால் வேலைகள் 2013 நொவம்பர் 19 இலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(iii) ஹொறண மற்றும் வெயங்கொடையிலுள்ள தற்போதைய மின் உற்பத்தி உப நிலையங்களின் விஸ்தரிப்பு வேலைகள் பொருட்களின் கொள்வனவிலுள்ள தாமதம் காரணமாக மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியது.

(iv) நிதி சேவை வழங்குனர் ஒருவரை தெரிவு செய்வதில் தாமதம் காரணமாக கிராமிய வீடுகளிற்கான மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 செயற்திட்ட கண்காணிப்பு

இலங்கை மின்சார சபையினால் கையாளப்படும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குப் பொறுப்பாக உள்ள மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திடடங்கள்) அதிகார எல்லையின் கீழ் இந்தச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் வரவில்லை. அதன் பிரகாரம் 08 பகுதிகளின் கீழான முழு நடவடிக்கைகளின் கீழான நெருங்கிய கண்காணிப்பு இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

செயற்திட்டத்தின் பொறியியலாளர்களிற்கு போக்குவரத்து வசதிகளை அளிப்பதற்காக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு செயற்திட்ட ஆவணங்களில் ஏற்பாடுகளெதுவும் இல்லாத போதிலும் நான்கு ஒப்பந்தக்காரர்கள் அந்த நோக்கத்திற்காக கடன் பெறுகைகளிலிருந்து 57 வாகனங்களைக் கொள்வனவு செய்திருந்தனர். மேலும் அந்த வாகனங்கள் ஒப்பந்தகாரரின் பெயர்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கூட்டுப்பேரேட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மீளளிப்புக்கள்
(இ) செயலாற்றல் மீளாய்வு